**செ.வெ.எண்: 583** **நாள்: 11.10.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வினாடி வினா போட்டியில்**
**வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசுத் தொகைகளை**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.10.2021) ரொக்கப் பரிசுகளை வழங்கினார்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்ட சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மாங்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவி சந்தியாவிற்கு முதல் பரிசாக ரூ.5,000, கைக்குறிச்சி ஸ்ரீபாரதி மகளிர் கல்லூரியில் இளங்கலை முதலாம் ஆண்டு மாணவி சிந்திகாராணிக்கு இரண்டாம் பரிசாக ரூ.3,000, மௌண்ட்சியான் இன்டர்நேசனல் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவி ஹரினிக்கு மூன்றாம் பரிசாக ரூ.2,000 ரொக்கப்பரிசுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் (பொ) டி.பக்கிரிசாமி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**